உ

கணபதி துணை

ஔவையார் அருளிச்செய்த

விநாயகரகவல்

மூலமும் - உரையும்.

பதிப்பகம் :

ஸ்ரீ வெங்கடேஸ்வர் அச்சுக்கூடம்,

கும்பகோணம்.

உரிமைப் பதிவு]

[விலை 0—4—0

முகவுரை

ஔவையார் என்பவர் பெண்பாற்புலவர். இவர் ஆதிபகவன் என்பவருக்குப் பிறந்தார் என்று கூறுவர். இவருடன் பிறந்தார் உப்பை உறுவை திருவள்ளுவர் முதலியோர். ஒவையார் பிறந்து பின்பு பாணர் வீட்டிலே வளர்ந்தார். மிகப்பெருந்தவம் உடையவர். அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவனால் கருநெல்லிக்கனி அளிக்கப்பெற்று உண்டு நீண்ட ஆயுளைப் பெற்றவர். மிக எளிமையுடையவராய் எவரிடத்தும் நடந்துகொள்வார். கூழுக்குப் பாடும் பாட்டி இவள். உலக இயல்பை நன்கு அறிந்து அதற்குத் தக்கபடி நடந்து இன்பம் அடைவார். செய்ந்நன்றி அறிதலில் இவரை ஒப்பாக எவரும் இலர் என்னலாம். தமிழ் நாட்டிலே தமிழ்ப்புலவர்களுக்கு அரசு எனத்திகழ்ந்தார். கலைமகளே இவர் என்று யாவரும் கொண்டாட இருந்தவர். இவர் செய்தனவாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்கள் உள்ளன. சிறுபிள்ளைகளுக்கு அவை எளிதாக நீதியைப் புகட்டுவனவாம். பெரும்புலவர்களுக்குப் பயனுடைத்தாக அவர் பாடிய பாட்டுக்கள் பல. அவை சங்கநூல்களில் கோக்கப்பட்டுள்ளன. கடவுட் பக்தியுடைய இவர் விநாயகமூர்த்தியின் தோத்திரமாக விநாயகரகவல் என்னும் இந்தச் சிறு நூலைப்பாடியுள்ளார். விநாயகரை வழிபடும் மெய்யன்பர்கட்கு இது பாராயண நூலாக இருந்துவருகிறது.

இந்த விநாயகர் அகவலைச்சிறுவர் முதல் பெரியோர் வரையில் உள்ள எல்லோரும் பாராயணம் பண்ணவேண்டும் அதனால் பெருநன்மைகள் உண்டு பொருள் தெரிந்து பாராயணம் பண்ணுதல் மிகவும் நல்லது. ஆதலால் இப் புத்தகம் பதவுரையுடன் வெளியிடப் பெறுகிறது. அன் பர்கள் படித்து இன்புறுவார்கள் என நம்புகிறோம்.

நாடோறும் ஒவ்வொருவரும் தலை முழுகியோ, குளித்தோ, அல்லது ஈரத்துணியால் துவட்டிக்கொண் டோ விபூதி அணிந்து சுத்தம் உடையவராய் ஒரு இடத்தில் தனியே இருந்து பாராயணம் பண்ணியபின் விநாயகக்கடவுளைப் பன்னிரண்டுதடவை வலம் வந்து தலையிலே குட்டுக் குட்டிக் கொண்டு, தோப்பணம் போட்டு தவறாமல் ஒருமண்டலம் செய்பவர்களுக்கு எல்லா நலமும் உண்டாகும். செவ்வாய்க்கிழமையில் சிதறு தேங்காய் உடைக்க.

உ

கணபதி துணை

ஔவையார் அருளிச்செய்த

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூடிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறு தாரத் தங்குச நிலையும்

பேரு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி இரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும்மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

விநாயகரகவல் பதவுரை

1 — 5 வரிகள்

சீதம் — குளிர்ச்சிபொருந்திய. களபம் — கலவைச் சாந்துபூசிய. செந்தாமரை—செந்தாமரை மலர்போலும். பூ பாதம்—அழகிய திருவடிகளில் அணிந்த. சிலம்பு — சதங்கையென்னும் அணிகலம். பல இசை—பலவிதமான இசைப்பாட்டுகளை. பாட — ஒலி செய்ய. பொன் — பொன்னுற் செய்யப்பட்ட. அரைஞாணும்—அரைஞாண் என்னும் ஆபரணமும். பூ துகில் ஆடையும்—பூ வேலை செய்யப்பட்ட மெல்லிய ஆடையும். வன்னம்—அழகிய. மருங்கில் — இடையிலே. வளர்ந்து — மேலும் மேலும் அதிகரித்து. அழகு எறிப்ப — அழகைவீச. பேழை வயிறும்—பெருமைபொருந்திய உதரமும். பெரும்பாரக் கோடும்—பெரிய வலிய சுமையையுடைய தந்தங்களும்.

6 — 10 வரிகள்

வேழமுகமும்—யானை முகமும். விளங்கு—பிரகாசிக்கின்ற. சிந்தூரமும்—சிந்தூரப்பொட்டும். அஞ்சுகரமும் — நான்கு திருக்கரங்களும் தும்பிக்கை ஒன்றும் ஆகிய ஐந்து கைகளும். அங்குச பாசமும்—யானையை ஓட்டும் தோட்டி என்னும் ஆயுதமும், கயிறும். நெஞ்சில் — மனத்தை. குடிகொண்ட — இருப்பிடமாகக்கொண்டு விளங்கித்தோன்றும். நீல மேனியும்—நீல நிறத்தையுடைய திருமேனியும். நான்ற வாயும்—தொங்குகின்றவாயும். நால் இருபுயமும்—எட்டுத்தோள்களும். மூன்று கண்ணும்— சூரியன் சந்திரன் அக்கினியாகிய மூன்று கண்களும். மும்மதம் சுவடும் — கன்ன மதம், கபோல மதம், கோச மதம் ஆகிய மூன்று மதங்கள் பொழிவதனாலுண்டாகிய தழும்பும்.

மும்மதத்தின் வகையாகிய ஒரு மதமும் இரு மதங்களும் மும்மதம் எனவே வழங்கப்படும். விநாயகருக்கு எட்டுத்தோள்கள் உள என்பதைப் ''பவள மால்வரைப் பணைக்கைபோங் தனைய, தழைசெவி எண்தோள் தலைவன்'' என்னும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவைச் செய்யுட் பகுதியில் காண்க.

11 — 15 வரிகள்

இரண்டு செவியும் — இரண்டு பெரிய காதுகளும். இலங்கு—விளங்குகின்ற. பொன் முடியும்—பொன்னாற் செய்யப்பட்ட கிரீடமும். திரண்ட — முறுக்கிவிட்ட முப்புரிநூல் — மூன்று புரிகளோடு கூடிய பூணுநூலானது. திகழ்—விளங்கும். ஒளி மார்பும்—ஒளியை வீசுகின்ற திருமார்பும். சொல் — சொல்லப்படுகின்ற. பதம்—ஆறு ஆதாரங்களையும் கடந்த—தாண்டி அப்பால் உள்ள. துரிய—துரிய நிலையின்கண்ணே. மெய்ஞ்ஞான — உண்மைஞானத்தோடுகூடிய. அற்புதம் நின்ற-ஆச்சரியப் படத்தக்க. கற்பகக்களிறே-கற்பகம்போன்று வரையாமல் அடியார்களுக்கு வேண்டும் வரங்களையளித்து வாழ்விக்கும் யானைமுகக்கடவுளே: கற்பகவிநாயகமூர்த்தியே என்றபடி. முப்பழம் நுகரும்—வாழை, மா, பலா ஆகிய முப்பழங்களையும் நுங்குகின்ற. மூடிக வாகன—பெருச்சாளியாகிய ஊர்தியையுடையவரே.

பெருச்சாளிவாகனம் ஆணவமலம் எனவும், அதன் மேல் விநாயகர் எழுந்தருளியிருத்தல் ஆணவமலத்தின் வலிமையை அடக்கி நிற்கும் நிலை எனவும் குறிக்கொள்க. இனி, முப்பழம் நுகர்தல் மூடிகத்தின் வினையன்று, மூத்த பிள்ளையாருக்கெனவே அறிக இதனை, ''வாழைக் கனிபலவின் கனி மாங்கனி தாஞ்சிறந்த,. கூழைச் சுருள்குழையப்பமெள் ளுண்டை எல்லாம் துறுத்தும், பேழைப் பெருவயிறு'' எனக் கூறியருளியமை காண்க.

இப்பொழுது—இத்தருணத்து. என்னை—ஒன்றுக்கும் பற்றாத எளியனேனையும். ஆட்கொள — அடிமையாகக் கொண்டருள. வேண்டி — விரும்பி. எனக்கு தாயாய் தான் எழுந்தருளி — அன்பு மிகுதிகாட்டி ஆதரித்தலில் எனக்குத் தாய்போன்று கருணைகாட்டித் தானே எழுந் தருளிவந்து. மாயா—அழியாத (நீங்காத). பிறவி மயக் கம் — பிறப்பிறப்புக்களிற்பட்டுச் சுழலும் சுழற்சியை. அறுத்து—கெடுத்து. திருந்திய—செம்மையான. முதல் —முற்பட்ட மந்திரமாகிய. ஐந்தெழுத்தும்—திருவைந் தெழுத்துக்களின் பொருளும். தெளிவாய் பொருந்த — ஐயம்திரிபுமயக்கம் இல்லாமல் பொருந்துமாறு. வந்து என் உளம்தனில் புகுந்து—யான் யாதொரு முயற்சியும் செய்யா மலிருக்கத் தானே வலியவந்து என்னுடைய மனத்திலே தியானப்பொருளாக எழுந்தருளி.

“தாயிற்சிறந்த தயாவான தத்துவனே” எனவும், “பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்து” எனவும் வரும் திருவாசகம் தாய் அன்பையும், தாயினும் மிக்க அன்பை யும் உடையவன் இறைவன் என்பதை வலியுறுத்தும். பிறவி மாயாமயக்கம் எனக் கூட்டிப் பிறப்பு இறப்புக் களாகிய மாயையினது மயக்கம் எனக் கூறுதலும் ஒன்று. மாயா என்பது; தோன்றி ஒடுங்குவதற்குக் காரணமாக உள்ளது எதுவோ? அது மாயா என்று சொல்லப்படும். சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என மாயை மூவகைப்படும். மாயாமயக்கம் பிறவிமயக்கம் எனத்தனித்தனி கூட்டிப் பொருள்விரிக்க. மாயையினது மயக்கம் எனப் பொருள் கூறின் அஃது ஆறும் வேற்று மைத் தொகை. மாயாத மயக்கம் எனப்பொருள் கூறின் அஃது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பிறவி மயக்கம் பண்புத்தொகை. ஐயம் திரிபு மயக்கமில்லாமல்

திருவைந்தெழுத்தின் பொருள் விளங்குமாறு சி–சிவத்தையும், வ–அருளையும், ய–ஆன்மாவையும், ந–மக்கள் திரோதம் ஆணவமலங்களையும் உணர்த்துவது என்க. இதனை,

"சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவனருள் ஆன்மாத் திரோதம் மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே"

என்னும் திருமந்திரம் முதலியவற்றால் உணர்க.

திருந்திய முத(லும்) ஐந்தெழுத்தும் – திருத்தமான பிரணவமும் ஐந்தெழுத்தும் எனினுமாம். அஃது ஐங்கலைப்பிரணவம் எனவும், முக்கலைப்பிரணவம் எனவும் கூறப்படும். ஐங்கலைப்பிரணவம்—அகார உகார மகாரம் நாதம் விந்து என்பன. முக்கலைப்பிரணவம் — அகார உகார மகாரங்கள்.

21 — 25 வரிகள்

குரு வடிவு ஆகி—ஆசாரியமூர்த்தமும் ஆக வெளிப்பட்டு வந்து. குவலயம் தன்னில்—இப்பூமியிலே. திருவடி வைத்து—அடியேனுடைய புலைத்தலையிலே திருவடி மலர்களைச் சூட்டித் தீட்சைசெய்து. திறம் இது பொருள் என —நிலையுள்ள பொருள் இதுவே என்று. வாடா வகை—பிறப்பிறப்பிற்பட்டு யான் வருந்தாத வண்ணம். மகிழ்ந்து எனக்கு அருளி — மகிழ்வுடன் அடியேனுக்கு அருளைச் செய்து. கோடு ஆயுதத்தால் — தமது கொம்பாகிய ஆயுதத்தினாலே, கொடு வினை களைந்து—கொடுமையாகிய வினைகளையெல்லாம் அடியோடு அகழ்ந்துபோக்கி. உவட்டாத—தெவிட்டாத. உபதேசம்—உபதேசப்பொருளை. என் செவியில் புகட்டி — எளியேனுடைய செவியிலே சிறக்கக்கொள்ளுமாறு உபதேசித்தருளி.

இறைவனே குருவடிவத்தில் எழுந்தருளுதலைத்திருமந்திரம்:

"சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
தத்தனை நல்கருள் காணு அதிமூடர்
பொய்த்தகு கண்ணுன் நமரென்பர் புண்ணியர்
அத்தன் இவனென் றடிபணி வாரே." எனவும்,

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே." எனவும்,

"திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை
மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்
பொருளாய வேதாந்த போதமும் நாதன்
உருவாய் வராவிடில் ஓரவொண் ணுதே." எனவும்

கூறுதல் காண்க. மற்றும்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே"

என்னும் சிவஞானபோதச் சூத்திரத்தானு முணர்க. இன்னும், "துன்னியவைம்புலவேடர் சுழலிற் பட்டுத் துணை வனையும் அறியாது துயருறுந்தொல் லுயிரை, மன்னு மருட் குருவாகி வந்தவரின் நீக்கி மலமகற்றித் தாளுக்கீ மலரடிக்கீழ் வைப்பன்" என வரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானு முணர்க.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என அருணகிரிநாதரும் அருளிச் செய்தமை காண்க.

26 — 30

தெவிட்டாத—தெவிட்டுதல் இல்லாத. ஞானத் தெளிவையும் காட்டி—ஞானத்தின் பிழிவையும் அனுபவத்திலே காணச்செய்து. ஐம்புலன் தன்னை — மெய், வாய், கண்,

மூக்குச் செவி யென்னும் பஞ்சேந்திரியங்களையும் விஷயங்களில் செல்லாதபடி. அடக்கும் உபாயம் — தடை செய்யும் உபாயத்தையும். இன்பு உறு கருணையின் — இன்பத்தை அடைவதற்கு ஏதுவாகிய கருணையோடு. இனிது எனக்கு அருளி — இனிமையாக எனக்குத் தெரிவித்து. கருவிகள் — தத்துவங்கள். ஒடுங்கும் — லயித்தலைச்செய்யும். கருத்தினை அறிவித்து — கருத்தையும் தெளிவுபடுத்தி. இருவினை தன்னை அறுத்து–நல்வினை தீவினை எனப்படும் தொடரையும் வெட்டிவிட்டு. இருள் கடிந்து — ஆணவமாகிய இருண் மலத்தையும் வலிகெடச்செய்து.

31 — 35

தலம் ஒரு நான்கும் தந்து எனக்கு அருளி—சாலோக சாமீப, சாரூப, சாயுச்சியம் என்னும் ஒப்பற்ற நான்கு தலங்களையும் முறையாக எனக்குத் தந்து. மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்து — ஆணவம், கன்மம் மாயை என்னும் மும்மலங்களால் உளவாகும் மயக்கைப் போக்கி. ஒன்பது வாயில் — ஒன்பது வாசல்களையும் ஒரு மந்திரத்தால் — ஒப்பற்ற உபதேச மந்திரப்பொருளாகிய தாழ்க் கோலைக்கொண்டு. ஐம்புலக் கதவை—ஐந்து புலங்களாகிய கதவுகளையும். அடைப்பதும் காட்டி–மூடுவதையும் அறிவித்து. ஆறு ஆதாரத்து — மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களின் மேலாகவுள்ள, அங்குச நிலையும் — அப்பால் உயர்ந்த நிலையையும்.

36 —40

பேறு ஆ நிறுத்தி — அடையும் முழுப் பயனாக நிலை பெறச் செய்து. இதனையே —

> "**ஆறு றையுநீத் ததன்மே னிலையைப்**
> **பேறு வடியேன் பெறுமா றுளதோ**"

என்றார் அருணகிரிநாதரும்.

பேச்சு உரை அறுத்து — மோன நிலையிலிருத்தி.
பேச்சு உரை அறுத்து என்பது :—

" குறியைக்குறியாதுகுறித்தறியும்
நெறியைத்தனிவேலைநிகழ்த்திடலும்
செறிவற்றுலகோடுரைசிந்தையுமற்
றறிவற்றறியாமையுமற்றதுவே " எனவும்,

" ....நினதன் பருளால்
ஆசா நிகளந்துகளாயினபின்
பேசாவநுபூதி பிறந்ததுவே " எனவும்,

" ....

சும்மாவிரு சொல்லற வென்றலுமே

அம்மா பொருளொன்று மறிந்திலனே " எனவும். ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தரநுபூதியிற் கூறியவைகள் இங்கு சிந்திக்கற் பாலன. இனி, இதன் விரிவெல்லாம் குருவருளால் சித்தாந்தச் செந்நெறி பற்றிச் சிந்தித்துணர்க. சித்தாந்த நூல்களான திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் முதலிய அநுபவ நூல்களையும் ஆராய்ந்து தெளிக.

இடைபிங்கலையின்—இடைகலை பிங்கலைகளின். எழுத்து அறிவித்து—இலக்கணத்தை அறியுமாறு செய்து. கடையில் — இறுதியிலே. சுழுமுனை — சுழுமுனை நாடியோடு தொடர்புடைய. கபாலமும் காட்டி — பரமாகாயத்தையும் அறிவித்து. மூன்று மண்டலத்தின்—அக்கினி மண்டலம், சூரியமண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களிலும். முட்டிய தூணின் — பொருந்த நிறுத்தப்பட்ட தூணைப்போன்று. நான்று எழு பாம்பின் – தூங்கி எழுகின்ற பாம்பின். நாவில் உணர்த்தி—அந்தக் குண்டலி சுழுமுனை வாயிலை விட்டு விலகச்செய்து என்றபடி " சொல்லிலும் பாசச்சுடர்ப்பாம்பு நீங்கிடும் "

என்றமையுங் காண்க. குண்டலிசத்தியை அடையின் அச் சத்தியின் உபகாரத்தால் மூலாதாரம் முதலிய ஆரு தாரமும் கடந்து மதியமுதமுண்டு அசைவற நின்ற பேரொளி தரிசனம் கண்டு உய்யலாம். அகண்டாகார அன்னையாகிய பராசத்தியை அடையின் சுத்தாத்துவித நிலைபெற்றுய்யலாம் என்க.

"நியம லட்சணமும் இயம லட்சணமும்
ஆச னுதிவித பேதமும்
நெடிது ணர்ந்திதய பத்ம பீடமிசை
நின்றி லங்குமச பாநலத்
தியல றிந்துவளர் மூலகுண் டலியை
இனிதி றைஞ்சிஅவ ளருளினுல்
எல்லை யற்றுவளர் சோதி மூலவனல்
எங்கள் மோனமனு முறையிலே
வயமி குந்துவரும் அமிர்த மண்டல
மதிக்கு ளேமதியை வைத்துநான்
வாய்ம டுத்தமிர்த வாரியைப் பருகி
மன்னுமா ரமிர்த வடிவமாய்ச்
செயமி குத்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞானநெறி அடைவனே" எனவும்,

"கண்ணக னிலத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்தினின் று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கவுரிகுண் டலியாயி
பண்ணவித னருளினுலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்.." எனவும்,

"மருமலர்ச் சோலைசெறி நன்னீழல் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா லிகைசொலும் இயமநிய மாதியர்
மார்க்கத்தில் நின்றுகொண்டு
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச னுதிசேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காமல்
உணர்வான விழியை நாடி
ஒன்றோ டிரண்டெனுச் சமரச சொரூபசுகம்
உற்றிடவென் மனதின் வண்ணம்
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ..."

எனவும் யாண்டும் ஸ்ரீ தாயுமானவ அடிகள் அருளி யமை நன்கு சிந்திக்கத்தக்கது.

"மூலநிலத்திலதோமுகமாய் முகிழ்த்துவிழியின்பொடு துயிலும், மூரிப்பாம்பைக் காலனலை மூட்டியெழுப்பி நிலமாறும், சீலமொடும்போய்த் தரிசித்துச் செழுமாமதி யின் அமுதக்கடல்தேக்கி"
என்பது திருப்போரூர்ச்சந்நிதி முறை.

மனிதப்பிறப்பை எடுத்ததனுல் அடையவேண்டிய முக்கியமாகிய பிரயோசனம் திருவருளை ஞானத்தால் அனு பவித்தல்; அது கிட்டாதவழி அத்திருவருளை அடைவதற்கு ஏதுவாகியயோகத்தினை அடைதல். ஹடயோகம் முதலியன தீமையை விளைக்கும். ஆகலின், சிவராச யோகமே சாலச் சிறந்தது என்க.

இங்குக் கூறப்படும் சிவராச யோகம் எல்லாவற்றினும் மேலானது. ஏனை ஹடயோகம் நிலையற்றது. சிவராச யோகம் யோக உறுப்புக்கள் எட்டுடன் கூடியது. அத னுல், அட்டாங்கயோகம் எனப்படும். இயமம், நியமம்

ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டுறுப்புக்களுடன் விளங்குவதனால் அதனை அட்டாங்கயோகம் என்பர். இராசயோகத்திற் பிறந்த அரசர்களுக்கு யானை முதலிய சதுரங்கங்கள் உள்ளன. சிவராச யோகிகளுக்கு மனம் முதலிய சதுரங்கங்கள் உள. அரசர்கட்கு மூன்றுலகங்களிலும் ஆணை செல்லும். யோகிகட்கு மூன்று மண்டலங்களிலும் செல்லும். அரசர்க்குச்சந்திரவட்டக்குடை யோகிகட்குச் சந்திரமண்டலமே குடை. அரசர்க்கு வாத்தியம் எக்காள முதலியன யோகிகட்குப் பத்துவித நாதங்கள். அவை:— சிணி நாதம், சிணிசிணீ நாதம், கண்ட நாதம், சங்கநாதம், வீணு நாதம், தாள நாதம், முரளீ நாதம், பேரீ நாதம், மிருதங்க நாதம், மேக நாதம் என்பன. மூன்று மண்டலங்களாவன :— 1, அக்கினி மண்டலம்—மூலம் முதல் நாபி வரை. 2. சூரிய மண்டலம்—நாபி முதல் கண்டம் வரை. 3. சந்திரமண்டலம்—கண்ட முதல் புருவம் வரையுள்ள பாகம் என்பர். பத்துவித நாதங்களையும்:—

> "மணிகடல் யானை வார்குழல் மேகம்
> அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
> தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
> பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண்ணதே"எனவும்,

"திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே" எனவும், திருமூலநாயனுர் தமது திருமந்திரத்தில் அருளிச்செய்தனர். இனி, புண்ணிய பாவங்களாகிய இரண்டு ஏற்ற மரங்கள் உள்ளன. எழுவகைத்தோற்றமாகிய ஏழுகிணறுகள்உள. அவற்றைப்பற்றிச் சுவாசமாகிய நீர் உள்ளது. பிங்கலை என்னும் சூரிய கலையாகிய மூத்தவன் நிச்சுவாசம் பண்ணமல் உச்சுவாசம்பண்ண, இளையவன்ஆகிய இடைகலை என்னும் சந்திரகலை அச்சுவாசம் ஆகிய நீர்போதற்குரிய வழியிலே செல்லாதபடி மாறுதல் செய்ய அதாவது

தானும் நிச்சுவாசம் பண்ணுமல் உச்சுவாசமேபண்ண, ஒவ்வொருநாளும் விடும் சுவாசமாகிய (21,600) நீரும் சுழுமுனை வழியிற் சென்று கும்பகம் ஆகிய பாத்தியிற் செல்லாமல் பாழாய் வெளியெங்கும் பரந்து போயிற்று. இது தலைவன் ஒருவனது விசாரணையில்லாமையால் கூத்தி வளர்த்துவிட்ட கோழிப்புள் போலாயிற்று

"ஏற்றம் இரண்டுள ஏழு கிணறுள
மூத்தான் இறைக்க இளையான் மடைமாறப்
பாத்தியிற் பாயாமல் பாழெங்கும் பாய்ந்தது
கூத்தி வளர்த்த கோழிப்புள் ஆமே"

என்பது திருமந்திரம்.

உச்சுவாசம், நிச்சுவாசம், இரண்டையும் அடக்கி, சுழுமுனை மார்க்கத்திலே பிராண வாயுவை நிறுத்தி. பொறிகளின் வழி மனத்தைச்செல்லவொட்டாமல்திருப்பி ஒரு குறிப்பிலே நிறுத்தி, ஆறு ஆதாரங்களின் அந்தர் மாதிருகாக் கிரமத்தை யறிந்து, அவ்வவ் ஆதாரங்களின் அதி தேவதைகளை தியானித்தல் வேண்டும். அவ் ஆறு தாரங்களினும் அஜபாசத்தி சிவான்மிகையாய் நிற்கும் முறைமையைப் பார்த்து, மூலாதாரம் தொடங்கி விநாயகர் முதலிய தேவதைகளைப் பொருந்தி அபிமுகம் பண்ணிக்கொண்டு. ஆறுதாரத்துக்கும் மேலாகிய பிரமரந் திரம் அளவும் அசபையுடன் சென்றணைதல் வேண்டும். அந்தப் பிரமரந்திரத்திலே, கீழ்நோக்கியபடியே இருக்கும் ஆயிரம் இதழுள்ள தாமரை முகையை அலரச்செய்து, அத் தாமரைப்பூவின் கேசர நுனியிலே உள்ள சந்திர மண்டலத்தை ஆகுஞ்சனம் செய்தலினாலே மூலாக்கினி யை அக்கினி பீஜாக்ஷர உச்சாரணத்தினாலே எழுப்பி, நாடி சக்கரத்தைப் பேதித்து, அவ் அக்கினியினாலே சந்திர மண் டலத்தை இளகப்பண்ணி, அந்த அமிர்தத்தை எல்லா நாடிகளின் வழியாகவும் நிரப்பி, அவ்விடத்துண்டாகிய சுகோதயத்தில் அந்தமயமான ஞானமிர்த அவஸ்தையை

அடைந்து நின்று, சோமசூரியாக்கினிப் பிரகாசங்கள் எல்லாம் தன்னிடத்தே நட்சத்திர ஒளிகள்போல அடங்கி நிற்க, ஸ்வயம் பரப் பிரகாசமாய் உள்ள பூரணப் பிரகாசத்தைப் பாவித்திருத்தலே சிவராசயோகமாம். இருதய புண்டரீகமே சிற்சபை. அப்புண்டரீகத்திலே தான் இறைவன் நடிக்கின்றான். நாம் ஏதேனும் ஒரு விஷயத்தை மறந்துவிட்டு நினைவுக்குக் கொண்டு வரும்போது மேலே நோக்குகிறோம். நாம் நினையாமலே அச்செய்கை நிகழ்கின்றது. "பாலாடை மேலே பரவுதல்போல ஒரு விஷயத்தை அறிய பிரமரந்திரத்தை நோக்கியே அறிதல் வேண்டும்." பிரமரந்திரத்திலே உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையே ஆயிரக்கால் மண்டபம். சிற்சபையில் நடிக்கும் நடராசப் பெருமான் ஆயிரக்கால் மண்டபத்துக்கு எழுந்தருளித் திருமஞ்சனங்கொண்டு, பின்பு கனகசபைக்கு எழுந்தருளும் காட்சிதான் தரிசனம் எனப்படும்.

இனி, வண்ணான் ஆகிய ஆன்மா ஆனவன், தோய்க்கும் கல்லாகிய அந்தக் கரணங்களின் மேல் உள்ள, இந்திரியங்களாகிய கண்மாய்களின் வழியாகவும், ஐம்புலன்களாகிய மோட்டைகளின் வழியாகவும் செல்லாமல் உச்சுவாச, நிச்சுவாசங்களாகிய கரையை யடைத்து,—விண்ணாறு ஆகிய சுழுமுனை வழியாகப் பிராண வாயுவைத் தேக்கி, சந்திர மண்டலத்தை மூலாக்கினியால் இளகப்பண்ணி ஒழுகும் அமுதத்தைக் குளமாகிய உடம்பிலே தேக்கி நிறைவித்து, மேல் நோக்கிப் பரஞ்சோதியை தியானிக்க அழுக்காகிய ஆணவமலம் நீங்கும். பரஞ்சோதி உண்டாம். இதனை

"வண்ணான் ஒலிக்கும் சதுரப் பலகைமேல்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாற்றைத் தேக்கிக் குளத்தை நிரப்பிட்டு
அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே"

என்னும் திருமந்திரத்தால் அறியலாம்.

இன்னும், "தம்பிரானார் திருவுளத்து அடைத்த ஆன்மாக்கள், கருவி கரணாதிகளில் உள்ள ஆரவாரங்களைத் திருவருட்டுணையானே ஒட்டி, வெற்றியுடனே திருவடிசேரச் செல்லுங்காலத்து அனவரதமும் பரமானந்த நிருத்தம் பண்ணியருளுகின்ற தம்பிரானார் திருவடிக்குச் சிலம்பும் ஓசையும் ஆன பரவிந்து பரநாதம் அடியார் பிறவித்துயர் கெடும்படி ஆரவாரிக்கும்: இந்தப் பரநாத வழியே சென்று பரமானந்த நிருத்தம் பண்ணும் தம்பிரானைத் தொழல் வேண்டும்." இதனை,

"திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற"

என்று மெய்கண்ட சாத்திரம் கூறும்.

இந்த நிலையிலேதான் "யோகப்புரவி மேற்கொண்டார் — புரவித்திரளாய் யோகப்பொலிவின் அசைவிற் போதும்" எனச் சேக்கிழார் பெருமான் சேரமான் பெருமானைக் கூறினார். பெருமிழலைக் குறும்ப நாயனாரும் இச் சிவயோகத்தையே அனுட்டித்தார். இதனைச் சேரமான் பெருமாள் நாயனார் சரித்திரத்தால் தெளிவாக உணரலாம்.

41 — 45

குண்டலி அதனில் — குண்டலி சத்தியினிடத்து. கூடிய அசபை — பொருந்திய அசபா மந்திரமாகிய. விண்டு எழு மந்திரம் — மேலோங்கி எழுதற்குரிய இரகசியத்தை, (விண்டு—மலை) வெளிப்பட உரைத்து—வெளிப்பட உபதேசித்து.

அசபாமந்திரம்: என்பது ஒரெழுத்து ஒருமொழி. அது சகல மந்திரங்கட்கும் ஆதாரமாய் முதல்வனைக் குறித்து நிற்பது. அதுவரிவடிவில் காட்டத்தக்கதன்று உபதேசக் கிரமத்தாலறிய வேண்டுவது.

இதனைத் திருமூலநாயனார்—

"போற்றுகின்றேன் புகழ்ந்து புகழ் ஞானத்தைத்
தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி
சாற்று கின்றே னறையோ சிவயோகத்தை
ஏற்றுகின்றேனெம்பிரானே ரெழுத்தே" எனவும்,

"பொன்னான மந்திரம் புகலவு மொண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ் சுகத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டுபூரிக்கில்
பொன்னாகும் வல்லார்க் குடம்பு பொற்பாதமே"

எனவும் திருமந்திரமாலையில் அருளிச் செய்தமை காண்க.

மூலாதாரத்தின் – மூலாதாரத்தினிடத்திலே. மூண்டு எழுகனலை — அதிகரித்து சுவாலித்தெழுகின்ற மூலாக் கினியை. காலால் எழுப்பும் கருத்து அறிவித்து–பிராண வாயுவினாலே சுழுமுனைநாடி வழியாக எழுப்பும் கருத் தையும் தெரிவித்து. அமுத நிலையும்–சுழுமுனை நாடியின் நிலையையும். ஆதித்தன்–சூரியகலை (இயல்பாக) இயக்கமும் —நடைபெறும் விதத்தையும்.

46 — 50

குமுத சகாயன் — சந்திரகலையின். குணத்தையும் கூறி—தன்மையையும் நன்கு வெளிப்படையாகச்சொல்லி இடைசக்கரத்தின் — இடையிலுள்ள (அஃதாவது நாபித் தானமாகிய மணிபூரக முதலாகவுள்ள) ஈரெட்டு நிலையும் —பதினாறு கலைகளின் நிலைகளையும். உடல் சக்கரத்தின்— உடம்பிலுள்ள சக்கரங்களின். உறுப்பையும் காட்டி— உறுப்புக்களையும் தெரிவித்து. இடைச்சக்கரமாவது— நாபி. இருதயம். கண்டம். புருவமத்தி. நெற்றிநடு. நெற்றியின் மேல்பாகம். உச்சி. உச்சியின் பின் முதலியன. அதன்மேல் உள்ளது நிராதாரம்; அது நாதாந்தத்தின் மேலுள்ள சத்திகலைமுதல் உன்மனை வரையுமுள்ள பகுதி கள். சத்திவரை தூல. சூக்குமகலைகள். அதன்மேல்

உள்ளன அதிசூக்குமகலை, மகாசூக்குமகலைகள். கலைகளின் வடிவம், நிறம், நொடிக்காலம், உபாசனுக்கிரமம், மந்திரோச்சாரணக்கிரமம், தியானம் முதலியவைகளைக் குருவருளாற்பெற்றுச் சாதனை செய்க. சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும் — அறுவகைப்பட்ட தூலங்களும், நால்வகைப்பட்ட சூக்குமங்களும் ஆகிய பத்துக்கலைகளும், எண்முகம் ஆக — தியான மூலமாக. இனிது எனக்கு அருளி — இனிமையான இன்பநிலை எனக்குண்டாகும்படி அநுக்கிரகம் பண்ணி.

51 — 55

புரி அட்டகாயம் புலப்பட எனக்கு — பூதம்-5, தன்மாத்திரை—5, ஞானேந்திரியம் – 5. கன்மேந்திரியம்—5, அந்தக் கரணம்-3, குணம்—1. அதற்குக் காரணம் ஆகிய பிரகிருதி—1. கலாதி—5, ஆக எட்டுக்கொத்துகளுடன் கூடிய பர சரீரம் (அதாவது அதிசூக்கும தேகம்) புலப்படும்படியாக அடியேனுக்கு. (இதுமிருகேந்திரத்திற்கண்டது) [தன்மாத்திரை 5, அந்தக்கரணம்—3 ஆக எட்டும் சூக்குமதேகம் என்று காலோத்தரம் கூறுகிறது.] இதனை,

" அத்த னமைத்த வுடலிரு கூறினில்
சுத்தம தாகிய சூக்குமம் சொல்லுங்கால்
சத்த பரிச வுருப ரசகந்தம்
புத்திமா னாங்காரம் புரியட்ட காயமே "

எனத்திருமந்திரம் கூறும்.

தெரி எட்டு நிலையும் தெரிசனப்படுத்தி — ஆராய்ந்த ஆறு ஆதாரங்களும், நிராதாரமும், மீதானமும் ஆகிய எட்டு நிலைகளையும் அறியச்செய்து. கருத்தினில் கபாலவாயில் காட்டி—மனத்தைக் கபாலவாயிலிலே பொருந்தப்பண்ணி, (கபாலவாயில்—பிரமரந்திரம். அது ஆயிரவிதழ்க்கமலம்.) இருத்தி — அந்தச் சமாதிநிலையிலிருத்தி. முத்தி இனிது

எனக்கு அருளி—வீடுபேற்றை இனிமையாக (ஒன்றுக்கும் பற்ருத) நாயினேனுக்கும் அருளிச்செய்து. என்னை அறிவித்து-ஆன்மாவாகிய என்நிலைமையைஅறியச்செய்து. எனக்கு அருள்செய்து—எனக்குக் கிருபை பண்ணி.

"நானென்றும் தானென்றும் நாடினேன் நாடலும்
நானென்றும் தானென் றிரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினன்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனே."

56 — 60

முன்னை வினையின் முதலைக்களைந்து — அநாதிகாலந் தொட்டு இடையருதுவரும் பிறப்புஇறப்புகட்குக் காரண மாகிய வினைகளையெல்லாம் வேரோடு பறித்து, வாக்கும் மனமும் இல்லா — வாயாற் பேசுதலும் மனத்தால் நினைத் தலும் இல்லாத (செயலற்ற). மனோலயம் — மன நிலை ஒடுங்குமாறு. தேக்கி — நிறைவித்தும். சிந்தை தெளி வித்து—மனத்தைத் தெளிவித்தும். இருள்வெளி இரண் டுக்கு இடம் ஒன்று என்ன—அறியாமை அறிவு என்னும் இரண்டுக்கும் பிறப்பிடம் ஒன்றே என்று சொல்லும்படி. அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி — திருவருள்மிகுதியால் விளைகின்ற பரமானந்தக்கடலிலே முழுகச்செய்து. என் செவியில் — அடியேனுடைய காதுகளில்.

"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே."

"மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்ஞ
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்ஞல்
தனைமாற்றி யாற்றத் தகும்ஞானி தானே."

"வாக்கும் மனமும் மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொருள் நுண்ணிது
போக்கொன்றும் இல்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமும் அத்தனை ஆராய்ந்துகொள் வார்க்கே."

"சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே."

என்பது திருமந்திரம்.

61 — 65

எல்லை இல்லா—அளவில்லாத. ஆனந்தம் அளித்து—பரமானந்த சுகத்தை மூட்டி. அல்லல் களைந்து — பிறப் பிறப்புத் துன்பங்களை வேரோடு கெடுத்து. அருள் வழி காட்டி — திருவருள் மார்க்கத்தை அநுக்கிரகம்பண்ணி. சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி — ஆகாயத்திலே (புருவமத்தியிலே) சதாசிவமூர்த்தியைத் தியானம்பண்ணு முறையையும் அருளி. சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி—மனத்திலே (இதயகமலத்திலே) சிவலிங்கமூர்த்தியைப் பூசிக்குமுறையையும் உபதேசித்து. அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் — அணுக்களுக்குள் அணுக்களாயும் அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாலுமாய் உள்ளும்புறம்பும் நிறைந்து நிற்கும் நிலையை. இதனை,

"அண்டங்க ளெல்லாம் அணுவாக அணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறிதாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாயி னானும்
அண்டங்க ளீன்றாள் துணையென்பர் அறிந்தநல்லோர்"

என்னும் திருவிளையாடற்புராணச்செய்யுளால் அறிக.

66 — 72

கணு முற்றிநின்ற கரும்பு உள்ளே காட்டி—கணுக்கள் முதிர்ந்த சுவைநிறைந்த கரும்பானது (முக்கூட் கரும்பாகிய சிவபரம்பொருள்) இரண்டற அத்துவிதமாய் நிற்கும் நிலையையும் அறிவித்து. வேடமும் நீறும் விளங்க நிறுத்தி—திருவேடமும் திருவெண்ணீறும் பொலியும்படி நிலைபெறுத்தி. கூடும் மெய்த்தொண்டர்குழாத்துடன் கூட்டி—நிறைந்த உண்மை நாயன்மார்களுடைய கூட்டத்திலே அடியேனையும் கூட்டுவித்து, (பழவடியார்களுடன் கூட்டி என்றபடி) 'தொண்டரொடு கூட்டு கண்டாய்' "அடியேனுன் அடியார்நடுவுளிருக்கும் அருளைப்புரியாய்" என்றாற்போலக்கொள்க. அஞ்சு அக்கரத்தின் அரும்பொருள் தன்னை — பஞ்சாக்கரத்தின் அரியபொருளை. நெஞ்சக்கருத்தின் நிலை அறிவித்து—மனத்தில் நிலையாகத் தெளிவுபெறச்செய்து. தத்துவ நிலையை தந்து—உண்மை நிலையாகிய சிவபோகத்தை நுகரச்செய்து. எனை ஆண்ட — என்னை அடிமையாகக்கொண்டு ஆட்கொண்டருளிய. வித்தக—மேம்பாட்டையுடையவரே! விநாயக–மேலான் பொருள் யாதும் இல்லாது விளங்கும் தலைவரே! விரைகழல் ஏ—(உம்முடைய) மணம்பொருந்திய வீரக்கழலையணிந்த திருவடிகளே. சரண்—அடியேங்களுக்குப் புகலிடமாம். (எ—று.)

விநாயகரகவல் உரையுடன் முற்றிற்று.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

உ

சிவமயம்.

"அருந்தவருக் கரசுகலை யறுபத்து நான்கினுக்கு
மரசு ஞானம்
பொருந்தவருக் கரசுகுர வருக்கெல்லா மரசுநெடும்
பொன்மா மேருப்
பெருந்தவருக் கரசுதுறை சைப்பதியம் பலவாண
பிரானீ யென்றே
வருந்தவருக் கரசுபெறு நினைநிழற்றுந் திருவரசு
மகிழ்ந்து தானே."

மஹாவித்துவான், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்.